கூட்டுறவு அபிவிருத்தி
திணைக்களம் வ.கி.மா.
திருகோணமலை.
12.03.2004

சுற்று நிருபம் 04/2004

சகல பல நோக்கு / பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களினதும் இரண்டாம்படிச் சங்கங்களினதும் தலைவர்களுக்கும்.

**பொது, மாகாணசபை, நகரசபை, பிரதேசசபை தேர்தல்கள்**

மேற்படி தேர்தல்களில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், நிர்வாகசபை உறுப்பினர்கள், பணியாளர்கள் வேட்பாளர்களாக போட்டியிடுவதனால், சங்க நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், கூட்டுறவுச் சங்கங்களில் அடிப்படை விழுமியங்களை மேம்படுத்தலுடன் அரசியல் ஈடுபாட்டை தவிர்ப்பதற்குமாக பின்வரும் வகையில் செயற்படுதல் உசிதமானதென்பதை அறியத்தருகின்றேன்.

01. **பொதுக்கூட்டங்கள்:-**

1.1 வேட்புமனு தாக்கல் செய்யும் திகதியில் இருந்து உரிய தேர்தல் நடைபெற்று முடிந்து பத்து (10) நாட்கள் கழியும்வரையான காலப்பகுதியில் கிளைக்குழு அல்லது இயக்குனர்சபை தெரிவிற்கான பொதுக்கூட்டங்கள் எதனையும் நடாத்தாதிருத்தல்.

02. **வேட்புமனு தாக்கல் செய்துள்ள தலைவர், துணைத்தலைவர் மற்றும் இயக்குனர்கள்:-**

2.1 வேட்புமனு தாக்கல் செய்துள்ளமையை சங்கத்திற்கு எழுத்துமூலம் மூன்று நாட்களுள் அறிவித்தல் வேண்டும்.

2.2 தேர்தல் நடவடிக்கைக்காக நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சங்கத்தின் சொத்துக்களை அல்லது பணியாளர்களை பயன்படுத்தலாகாது.

2.3 வேட்புமனு தாக்கல் செய்த பின் தனது தேர்தல் நடவடிக்கைக்கு அனுகூலமான எந்தவொரு சங்க நடவடிக்கையிலும் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.

2.4 வேட்புமனு தாக்கல் செய்த பின் தாமாகவே சங்க நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்க விரும்பின், இயக்குனர் சபையின் தீர்மானத்தினூடாக அவ்வாறு செயற்பட முடியும்.

03. **வேட்புமனு தாக்கல் செய்துள்ள பணியாளர் :-**

3.1 வேட்புமனு தாக்கல் செய்தமை மூன்று நாட்களுக்குள் சங்கத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

3.2 இயக்குனர்சபை இவ்வறிவித்தலை ஏற்று தேர்தல் முடிவடையும்வரை உரிய பணியாளருக்கு சம்பளமற்ற லீவு வழங்கலாம். ஆயினும் உரிய பணியாளர் தனக்குரித்தான சம்பளத்துடனான லீவு இருப்பின் அதனை பெற்றுக்கொள்ள முடியும்.

3.3 இக்காலப்பகுதியில் உரிய பதவியில், பதில்கடமை ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் உரிய பதவி, வெற்றிடம் எனக்கருதி பிறிதொரு பணியாளரை சேவையில் ஈடுபடுத்தலாகாது.

04. தேர்தல் முடிவுற்ற பின்னர் வேட்புமனு தாக்கல் செய்த அலுவலர் அல்லது பணியாளர் இயக்குனர் சபையின் அனுமதிபெற்று மீள தனது சேவையை தொடரமுடியும்.

**இ.இளங்கோவன்,**
**கூ.அ.ஆணையாளரும்,**
**கூ.ச.பதிவாளரும்(வகி).**

பிரதி: கூ.அ.உ.ஆணையாளர், தகவலுக்கும் உறுதிப்படுத்தலுக்குமாக.

Iv/